# கொங்கு நண்பர்கள் இதழ்

பதிவு எண். : 248/2012

திருவள்ளுவர் ஆண்டு 2042 (புரட்டாசி–ஐப்பசி) அக்டோபர் 2012 ஏர்-01, உழவு-04, விலை ரூ.10.00

பதிப்பாளர் :
கே.பாலசுப்பிரமணி
கொங்கு நண்பர்கள் இதழ்
ஆசிரியர் & பதிப்பாளர்
H-71, 5வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை – 600 102.
செல் : 93815 45452

அச்சகம் :
மரியம் இப்ராஹிம்
பிராம்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ்
நெ.49/37, வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.

## இந்த இதழில்


| | |
|---|---|
| பொருளடக்கம் | - 1 |
| தலையங்கம் | - 2 |
| கட்டட நிதி | - 3 |
| வேண்டுகோள் | – 4 |
| அடையாள அட்டை விண்ணப்பம் | – 5 |
| வெள்ளை மாளிகையில் நம்மவர் | – 6 |
| சந்தனம் | - 8 |
| வாழ்த்துகிறோம் | - 10 |
| கொங்கு சாதனையாளர் | - 11 |
| குடும்ப விழா 2012 | - 15 |
| கொங்கு சாதனையாளர் | - 19 |
| இதயநோய் | - 23 |
| மணமகள் தேவை | - 24 |
| மணமகன் தேவை | - 26 |
| மணமகள் தேவை | - 29 |


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / கொங்கு நண்பர்கள் இதழ் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பு சொந்தங்களுக்கு,



வணக்கம், பொன்விழாவை மிகச்சிறப்பாக நடத்தியதற்கு நேரிலும், தொலைபேசி மற்றும் கடிதம் மூலமும் வாழ்த்து தெரிவித்த அனைத்து கொங்குச் சான்றோர்களுக்கும், சொந்தங்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொன்விழா முடிந்த பிறகு தற்போதைய செயற்குழுவின் பதவிக்காலம் செப்டம்பர் மாதம் முடிவதையொட்டியும், புதிய செயற்குழு விரைவில் பொறுப்பேற்க ஏதுவாகவும் பொதுக்குழு மற்றும் தேர்தல் 30–09–2012 அன்று நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் சில தவிர்க்க முடியாத காரணங்களினால் தேர்தல் குறித்த அறிவிப்பு உரிய காலத்தில் உறுப்பினர்களுக்கு கிடைக்கவில்லையென்பதால், சங்க விதிகளின்படி போதிய கால அவகாசம் கொடுத்து பொதுக்குழுவையும் தேர்தலையும் நடத்த வேண்டும் என்று சங்க உறுப்பினர் ஈரோடு திரு.சுந்தரசாமி அவர்கள் முறையிட்டதையடுத்து, பொதுக்குழு மற்றும் தேர்தல் 25–11–2012 ஞாயிற்றுக்கிழமை அன்று நடத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது குறித்த முறையான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். உறுப்பினர்கள் அனைவரும் பொதுக்குழுவில் கலந்து கொண்டு தங்கள் மேலான கருத்துகளைத் தெரிவிப்பதோடு, 2012–2014 ஆம் ஆண்டின் புதிய நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடையாள அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் புதிய அடையாள அட்டை அனுப்பப்பட்டுவிட்டது. இதுவரை விண்ணப்பம் உரிய படிவத்தில் அனுப்பாதவர்கள் உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை அவசியம் என்பதை நினைவூட்ட விழைகிறேன்.

பொன்விழா சிறப்பு மலருக்கு விளம்பரம் அனுப்பியவர்கள் அனைவருக்கும் விழா மலர் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டது. மலர் கிடைக்காதவர்கள் சங்கத்தை அணுக வேண்டுகிறேன். 'சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் – 50 ஆண்டு வரலாறு' நூல் சங்கத்தின் அனைத்து முன்னாள் நிர்வாகிகளுக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நூல் இதுவரை கிடைக்காதவர்கள் சங்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

தமிழகத்தில் தற்போது நிலவிவரும் வரலாறு காணாத கடும் மின்வெட்டால் விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கொங்கு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின்தடையினால் படும் சிரமங்கள் சொல்லிமாளாது. தமிழக அரசு மின்வெட்டை நீக்க தக்க நடவடிக்கைகளைப் போர்க்கால அடிப்படையில் எடுக்கவேண்டும் என்று சங்கத்தின் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்வதோடு, விவசாயிகளுக்கு தகுந்த உதவியும், இழப்பீடும், மானியமும் கொடுத்து, நலிந்துபோயுள்ள விவசாயத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

பரணி கே. பாலசுப்பிரமணி
தலைவர்

❖❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 72,53,037 |
| 1702 | 2779 | V.தங்கவேல் | 1000 |
| 1703 | 1629 | D.சுப்ரமணியன் | 1000 |
| 1704 | | S.ஜனனி LH | 1000 |
| 1705 | 451 | K.வேலுசாமி | 1000 |
| 1706 | 3107 | V.முத்துகுமார் | 1000 |
| 1708 | 693 | Dr.D.சிதம்பரம் | 1000 |
| 1709 | | மோகன் தினேஷ் GH | 1000 |
| 1710 | | விஷ்ணுபாலன் GH | 1000 |
| 1711 | | L.ஜனனிபிரியா LH | 1000 |
| 1712 | 2128 | C.ராஜாமணி | 1000 |
| 1713 | 4 | M.செல்லதுரை | 1000 |
| 1714 | 888 | M.ஜெயராஜ் | 1000 |
| 1715 | | கார்த்திகா LH | 1000 |
| 1716 | 464 | S.பெரியசாமி | 1000 |
| 1717 | 2577 | தினேஷ்குமார் | 1000 |
| 1718 | | J.P.கௌதமன் GH | 1000 |
| 1719 | 3412 | M.பொன்னம்பலம் | 1000 |
| 1720 | | C.H.ராமசாமி | 1000 |
| 1721 | | கிருஷ்பிரதீப் GH | 1000 |
| 1722 | | K.கலைவேந்தன் GH | 1000 |
| 1723 | 1867 | R.லோகநாதன் | 1000 |
| 1724 | 1925 | A.சிவசாமி | 1000 |
| 1725 | 0236 | S.சித்தார்த் | 1000 |
| 1726 | | K.சுகன்யா LH | 1000 |
| | | மொத்தம் | 72,78,037 |

## உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்க முடிவு செய்து, செய்தி மடலில் வெளியிடப்பட்டுள்ள அடையாள அட்டை மாதிரி விண்ணப்பத்தில் தேவையான தகவல்களைப் பூர்த்தி செய்து அனுப்பும்படி உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதுவரை விண்ணப்பித்த உறுப்பினர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டுவிட்டது. ஏற்கனவே விண்ணப்பித்து யாருக்கேனும் அடையாள அட்டை இதுவரை கிடைக்கவில்லையென்றால், சங்கத்தைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

சங்கத்தின் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும், சங்கம் அளித்துவரும் சலுகைகளைப் பெறுவதற்கும் புதியதாக வழங்கப்பட்டுவரும் அடையாள அட்டை அவசியம் தேவைப்படும். எனவே இதுவரை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அனுப்பாத உறுப்பினர்கள் இனியும் காலம் தாழ்த்தாது உடனே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

❖❖❖❖❖

## சங்கச் செய்தி

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் இணையதள முகவரி மாற்றப்பட்டுள்ளது.

www.kongunanbargalsangam.com

உறுப்பினர்கள் இனிமேல் புதிய இணையதளத்தைப் பயன்படுத்தி சங்கச் செய்திகளை அறிந்துகொள்ள வேண்டுமென அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். ‘கொங்கு நண்பர்கள் இதழ்’ இந்த இணையதளத்தில் முழுமையாக வெளியிடப்படுகிறது. உலக முழுவதிலும் உள்ள கொங்குச் சொந்தங்கள் இதைப் படித்துப் பயன்பெறலாம்.

பரணி **கே. பாலசுப்பிரமணி**
தலைவர்

**ஆர். செல்வராஜ்**
செயலாளர்

❖❖❖❖❖

அடையாள அட்டை விண்ணப்பம்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

**வெள்ளி விழா இல்லம்**
நெ.34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.

Membership No. / உறுப்பினர் எண் :
Name / பெயர் :
Father's Name / தகப்பனார் பெயர் :
Date of Birth / பிறந்த தேதி :
Edu. Qualification / கல்வித்தகுதி :
Occupation / தொழில் :
Koottam & Kula Deivam
கூட்டம் & குல தெய்வம் :

Photo

| Native Address சொந்த ஊர் முகவரி | Present Address தற்போதைய முகவரி | Office Address அலுவலக முகவரி |
|---|---|---|
| Ph : | Ph : | Ph : |

Cell Number: E-mail ID :

Family Details / குடும்ப விவரம்

| Name உறுப்பினர் பெயர் | Date of Birth பிறந்த தேதி | Relationship உறவுமுறை | Education / Employment படிப்பு / தொழில் | Blood Group இரத்தப் பிரிவு | Land Line / Mobile தொலைபேசி/கைபேசி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

குறிப்பு : தங்களைப் பற்றி மேலும் விபரங்களைத் தெரிவிக்க விரும்பினால் அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பவும்.

Signature
கையொப்பம்

# வெள்ளை மாளிகையில் நம்மவர்

அமெரிக்கா செல்லும் ஒவ்வொருவரும் அமெரிக்க அதிபர் வசிக்கும் வெள்ளை மாளிகையைப் பார்க்க எண்ணுவர். மாளிகையை வெளியில் இருந்துதான் பார்க்க முடியும். அதையும் அமெரிக்க ரகசிய போலீஸ் கவனித்துக்கொண்டே இருக்கும். மாளிகையின் உட்புறம் எப்படி இருக்கும் ? யாரெல்லாம் இருப்பார்கள் ? அவர்களின் பணி என்னவாக இருக்கும் ? என்பதையெல்லாம் கற்பனை செய்து கொள்ள வேண்டியதுதான். இப்படியான வெள்ளை மாளிகையில் நம்மவர் ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி மாளிகையில் உதவியாளராக அண்மையில் பணியில் சேர்ந்திருக்கிறார்.

அவர் பெயர் கெவின் சாமி. அதென்ன கெவின் என்கிறீர்களா ? அவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் முத்து. அமெரிக்காவில் பிறந்து அங்குள்ள பள்ளியில் சேர்ந்த முத்துவிற்கு இந்தப் பெயர் பிடிக்கவில்லை (காரணம் மற்ற குழந்தைகளின் பெயர்கள்). அதனால் அவரே தேர்ந்தெடுத்துக்கொண்ட பெயர் கெவின். அதைக் கண்ட அவருடைய தந்தை டாக்டர் இராமசாமி பழனிசாமியும் தன்பெயரை ராம் பி.சாமி என்று சுருக்கிக்கொண்டார்.

டாக்டர் ராம் பி.சாமி கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனது பள்ளித்தோழர் (அரசு உயர்நிலைப்பள்ளி, தென்னிலை). பொறியியல் பட்டம் பெற்றவர். ஏவுகணைப் பொறியியலில் நிபுணத்துவம் வாய்ந்தவர். இப்பொழுது அமெரிக்காவில் சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறார்.

ராம் பி.சாமி தம்பதியருக்கு இரு மகன்கள். இளையவர் கெவின். வயது 25. பள்ளி, கல்லூரிப் பருவத்தில் பல துறைகளில் சிறந்து விளங்கியவர். கால்பந்து குழுவின் தலைவர்; சிறந்த பேச்சாளர்; பேச்சுப் போட்டிக் குழுத் தலைவர்; மல்யுத்த வீரர்; பளுதூக்குவதில் சாதனை படைத்தவர் எனப் பல தகுதிகளைக்கொண்டவர். ஒஹையோ, யேல் ஆகிய சிறந்த பல்கலைக்கழகங்களில் படித்து சிறப்புத் தகுதியுடன் வெளிவந்தவர்.

கெவின் தன்னுடைய ஆர்வத்தால் தகுதி அடிப்படையில் வெள்ளை மாளிகையில் பயிற்சி மாணவராகச் சேர்ந்தார். பயிற்சியின் முடிவில் அவர்தம் தகுதி காரணமாக இப்பொழுது வெள்ளை மாளிகையில் உதவியாளராகப் பணியில் சேர்ந்திருக்கிறார்.

ஆறடி இரண்டு அங்குலம் உயரம் கொண்ட கெவினைப் பார்த்து அதிபர் ஒபாமாவே ஆச்சரியம் அடைந்திருக்கிறார். இவ்வளவு உயரமான இந்திய அமெரிக்கரை இதுவரை நான் பார்த்ததில்லை என்றாராம் அவர். அத்துடன் உங்கள் தாயார் உங்களுக்கு என்ன உணவு கொடுக்கிறார் என்றும் கேட்டிருக்கிறார். அவருடைய தாயார் தோசை செய்து தருவதாகக் கூறியதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த அதிபர், அதுபற்றி மேலும் அறிய விரும்பி இருக்கிறார். கெவினும் ஓரளவு தோசை பற்றி விளக்கியிருக்கிறார். அதிபருக்கு

என்ன புரிந்ததோ ? ஆனாலும் அவர் சொன்னது, 'எனக்கும் தோசைமேல் காதல் வந்துவிட்டது'.

கெவினுக்கு வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும், வேகமும் இருக்கின்றது. அவருடைய தந்தையிடம் கெவின் சொன்னது, "அப்பா நீங்கள் சிறு கிராமத்தில் பிறந்து தொக்கடா தாண்டிச் சென்று, சிறிய கிராமப்பள்ளியில் படித்து ஏவுகணை விஞ்ஞானியாக வளர்ந்திருக்கிறீர்கள்! நான் அதைவிட வளர்ந்தால்தானே உங்களுக்குப் பெருமை". வளர்வார்! வாழ்த்துவோம்!

கெவினுடைய அண்ணன் கண்ணன் (வயது 27) மாணவப் பருவத்தில் டென்னிஸ், பேச்சுப்போட்டியில் சிறந்து விளங்கியவர். தற்போது அறுவை சிகிச்சை நிபுணராகப் பயிற்சி பெற்று வருகிறார். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற வேண்டுமென்பது அவரது குறிக்கோள்.

தகவல் :– டாக்டர் எஸ்.இராமசாமி
Phone : 044-2225 3456 Mobile : 9444837230 E-mail : drsrmasami@gmail.com

❖❖❖❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்

கரூர் மாவட்டம், திருக்காடுதுறை கிராமத்தைச் சேர்ந்தவரும், நமது சங்க உறுப்பினருமான டாக்டர் கே.பாலசுப்பிரமணியன் M.Sc., M.Phil., Ph.D., FRE, அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின் Dr. ALM PG Institute of Basic Medical Sciences நிறுவனத்தில் Endocrinology துறையில் பேராசிரியராகவும் இயக்குநராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

பேராசிரியர் பணி மற்றும் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கி சிறப்பாகச் சேவையாற்றியுள்ள இவருக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'Academic Achievement Award - 2012' என்ற விருது வழங்கப்பட்டது. 05–09–2012 அன்று சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் மாண்பமை பி.பழனியப்பன் அவர்கள் இந்த விருதினை வழங்கினார்.

பேராசிரியர் பணியில் சிறப்பாகப் பங்காற்றி, உயரிய விருதைப்பெற்று சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள டாக்டர் கே.பாலசுப்பிரமணியன் அவர்களை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# சந்தனம் அறிந்ததும் அறியாததும்

– கே.கே.சோமசுந்தரம் IFS (Retd)



சந்தனம் ஒரு மதிப்புமிக்க மரம் என்பதும், காடுகளில்தான் அதிகம் விளைகிறது என்பதும், இதன் அசாதாரண விலை மதிப்பால் இதனைத் திருட்டு வெட்டாக காடு களிலிருந்து வெட்டிச் செல்கிறார்கள் என்பதும் மக்களுக்கு தெரிந்த விசயம். ஆனால் மனிதனுக்குத் தெரியாத விஷயங்கள் பல உள்ளன.

சந்தனம் 1970 களில் டன் ஒன்றுக்கு ரூ. 7000க்கு தான் விற்கப்பட்டது. ஆனால் தற்போதைய உச்சகட்ட விலை டன்னுக்கு ரூ. 65,00,000/– (அறுபத்தி ஐந்து இலட்சம்). வனத்துறையால் மட்டும் காடுகளிலிருந்து காய்ந்த சந்தன மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டு, சேலம், திருப்பத்தூர், சத்தியமங்கலம் ஆகிய கிடங்குகளிலிருந்து வருடத்திற்கு இரண்டுமுறை ஏலம் விடப்படுகிறது. பச்சை மரம் வெட்டப்படுவதில்லை.

வேர்ப்பகுதியிலும், அடி மரத்திலும் 5 சதவிகிதம் எண்ணை கிடைக்கிறது. மேல் பகுதியில் சுமார் 2 முதல் 4% வரை கிடைக்கிறது. மரங்கள் சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு பாய்லர் மூலம் ஆவியாக்கி பின்னர் குளிர்வித்து எண்ணை எடுக்கப்படுகிறது. உலகம் முழுவதும் தற்போதைய சந்தனத்தின் தேவை சுமார் 5000 – 6000 டன். எண்ணையின் தேவை சுமார் 120 டன். இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகாவில் மட்டும் 80–90 சதவிகிதம் விளைகிறது. கேரளா, ஆந்திரா, ஒடிசா ஆகிய இடங்களில் மிகச்சிறிய அளவே கிடைக்கிறது. உலகத்தேவையை பெருமளவு இந்த மூன்று மாநிலங்கள்தான் பூர்த்தி செய்கின்றன.

சந்தன மரங்களைக் காப்பாற்ற கடும் சட்டங்கள் உள்ளன. வெட்டுபவர்களுக்கு 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை உண்டு. சந்தனம் வைத்திருந்தால் வனத்துறை, காவல்துறை அதிகாரிகள் வாரண்ட் இல்லாமல் கைது செய்யுமுடியும், Search வாரண்ட் வீடுகளில் தேடவும் முடியும். வாடிக்கையாக சந்தன மரங்களைத் திருடுபவர்கள் மீது குண்டர் சட்டம் பாயும். சம்பந்தப்பட்ட வண்டிகள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் விடப்படும். ஒரு கால கட்டத்தில் இவ்வாறு பிடிக்கப்பட்ட வண்டிகள் (கார், வேன், லாரி, ஸ்கூட்டர் முதலியன) வனத்துறையில் மூவாயிரத்தையும் தாண்டியது.

இந்தியா தவிர சந்தனம் வேறு சில நாடுகளிலும் சிறிதளவு காணப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் இது Santalum Spicatum மற்றும் Santalum Lanceolatum என்ற தாவரப்பிரிவுகளிலும், கிழக்கு ஆப்ரிக்காவில் Osyris Tenuifolia எனவும், ஹவாய் தீவில்

Santalum Paniculatum எனவும் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் இந்திய கண்டத்திலுள்ள சந்தனத்திற்கு இணையாகாது. இந்தோனேஷியாவிலும் சிறிதளவு சந்தனம் வளர்கிறது.

சந்தனம் ஒரு வேர் ஒட்டுண்ணி (Root Parasite). தக்க மரம் அருகில் இருந்தாலோ (அல்லது) வளர்ந்தாலோதான் அதன் வேர்களில் சந்தனவேர் பிணைந்து, நன்கு வளர்ந்து வைரமுள்ள மரமாக வளர்கிறது. இல்லை யெனில் இலைகள் வெளுத்து சில ஆண்டுகளில் மடிந்துவிடும். சவுக்கு கிளைரிசிடியா, வெப்பாலை, வேம்பு, புங்கம் இன்னும் 35 வகையான மரங்கள் இதற்குத் துணை நிற்கின்றன. வேர் முடிச்சு உள்ள மரங்கள் மிகவும் நன்மை செய்கின்றன என்று ஆராய்ச்சியில் நிரூபித்துள்ளனர்.

முதல் முதலாக சந்தன எண்ணை ஆலை 1916 ஆம் ஆண்டு மைசூர் திவானாக இருந்த சர்.எம்.விஷ்வேஸர்ய்யாவின் தனி முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு, 1917 முதல் மைசூரில் இயங்கி வருகிறது. தற்போது இது ‘கர்நாடகா சோப்ஸ் அண்ட் டிடர்ஜண்ட்ஸஸ்’ என்ற பெயரில் இயங்கி வருகிறது. பெயர் பெற்ற மைசூர் சோப் இங்குதான் தயாரிக்கப்படுகிறது.

ஒரு கிலோ சந்தன எண்ணையின் தற்போதைய விலை சுமார் ரூ ஒன்றரை லட்சம். தமிழ்நாடு அரசால் வனத்துறை மூலம் திருப்பத்தூர் பக்கமுள்ள (வ.ஆ) தெக்குப்பட்டு என்ற இடத்தில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் எண்ணை பிழியும் ஆலை நிறுவப்பட்டது. பின்னர் சில ஆண்டுகளுக்கு முன்னர் தேவையான மரம் இல்லாததாலும், வேறு சில நிர்வாக காரணங்களுக்காகவும் நிறுத்தப்பட்டது.

சந்தன மரம் திப்புசுல்தான் காலத்திலேயே அரசுடமை ஆக்கப்பட்டது. திப்புசுல்தான் சந்தன மரக் குற்றங்கள் புரிபவர்களின் வலது கையை வெட்டி தண்டனை கொடுத்ததாக சரித்திரம் கூறுகிறது. கர்நாடக, தமிழ்நாட்டுப் பகுதிகளை ஆண்ட மன்னர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும் சந்தனக் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்துள்ளனர்.

சந்தன மரம் காடுகளில் மிகவும் குறைந்துவிட்டதால் தனியாரும் தோட்டங்களில் வளர்க்கலாம் என கர்நாடக அரசும், தமிழ்நாடு அரசும், 2001 மற்றும் 2002ல் சட்டத்திருத்தங்கள் கொண்டு வந்தன. (TN Act 33 of 2012) 2008ல் தமிழ்நாடு திருத்திய சந்தன விதிகளின் படி தனியார் வளர்க்கும் மரங்களை அரசே வாங்கிக்கொண்டு 80 சதவிகிதம் தொகையை வளர்ப்பர்களுக்குக் கொடுத்து விட்டு பாக்கியை நிர்வாகச் செலவுகளுக்காக வைத்துக் கொள்ள விதிகள் வகுப்பட்டபட்டுள்ளன. முதலில் 30 நாட்களுக்குள் மதிப்பில் 20 சதவிகிதம் கொடுக்கப்பட்டு விடும். பாக்கி 60 மூன்று மாதத்திற்குள் பட்டுவாடா செய்யப்படும். .....தொடரும்

❖❖❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்




நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம், காக்காவேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.செங்கோட கவுண்டர் அவர்களின் மகன் டாக்டர் எஸ்.நடேசன் M.S., DLO., அவர்கள் சென்னை ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியில் ENT துறையில் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 05–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக வெள்ளிவிழாவில் இவருடைய சிறந்த மருத்துவச் சேவையைப் பாராட்டி 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டப்பட்டார்.

மருத்துவச் சேவைக்காக 'வாழ்நாள் சாதனையாளர்' விருது பெற்று, சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள டாக்டர் எஸ்.நடேசன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

## வாழ்த்துகிறோம்




ஈரோடு திண்டல் நகரில் வசித்து வரும் நமது சங்கத்தின் உறுப்பினர் திரு. எஸ்.கே.கந்தசாமி அவர்களுடைய மகன் செல்வன் கே.கே.கார்த்தீஸ்வரன், சென்னை கிண்டி பொறியியல் கல்லூரியில் B.E., (CSE) முடித்த பின்னர், CAT நுழைவுத் தேர்வு எழுதி முதன் முயற்சியிலேயே IIM, Ahamadabad ல் இரண்டு ஆண்டு முதுநிலை பட்டப்படிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, 2012 ஆம் ஆண்டு ஜீன் மாதம் அங்கு பயின்று வருகிறார். செல்வன் கார்த்தீஸ்வரன் 12 ஆம் வகுப்பில் 1200க்கு 1183 மதிப்பெண்கள் பெற்று 2008 ஆம் ஆண்டு சங்கத்தின் முதல் பரிசும், பாராட்டும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்றுள்ள IIM, Ahamadabad, கல்லூரியில் PGDM படிப்பில் சேர்ந்து சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள செல்வன் கே.கே.கார்த்தீஸ்வரன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கே.கே.இலட்சுமணன்

டாக்டர் கே.கே.இலட்சுமணன் அவர்கள் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயலாளராக 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். அப்போது சங்கத்தின் தலைவராக இருந்தவர் அருட்செல்வர் கொங்கு மாமேதை நா.மகாலிங்கம் அவர்கள் ஆவார்.

நாமக்கல் மாவட்டம் களிமேடு கிராமத்தைச் சேர்ந்த காளியண்ண கவுண்டர் – திருமதி அம்மையக்காள் தம்பதியரின் மகனாக 1932 ஆம் ஆண்டு பிறந்தவர். முதுகலை வரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றார். 1955 ஆம் ஆண்டிலிருந்து சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். அலெக்ஸாண்டர் ஹூம் போல்டு அறக்கட்டளை உதவியுடன் திசு வளர்ப்பு பற்றி ஜெர்மனி நாட்டின் மைன்ஸ் பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டுவரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக மிகச்சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1992 ஆம் ஆண்டுவரை கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மிகவும் அர்ப்பணிப்போடு தாவரவியல் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1986 ஆம்ஆண்டு Indo America Visiting Professor Exchange Programme மூலமாக அமெரிக்கா சென்று மியாமி பல்கலைக்கழகத்தின் மூலம் ஃபிளாரிடா கடற்கரை சதுப்பு நிலக் காடுகளை ஆராய்ந்தவர். பாரதியார் பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையைத் தோற்றுவித்து உயரிய நிலை மையமாகும் அளவுக்கு வளர்த்தார். 250க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் நடந்த கருத்தரங்குகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

1992 ஆம் ஆண்டு அரசுப்பணியிலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்னரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல பயிற்சி முகாம்களை நடத்தினார். 13 மாணவர்கள் இவருடைய சீரிய மேற்பார்வையில் முனைவர் பட்டமும், 46 மாணவர்கள் எம்.ஃபில் பட்டமும் பெற்றனர். 80 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இன்றும் சமூகசேவை, இயற்கை வேளாண்மை, மூலிகை ஆராய்ச்சி என இவருடைய செயல்கள் தொடர்கின்றன.

ஈரோடு PV Trust ன் நிறுவனர் மற்றும் தலைவராக உள்ளார். கடந்த 22 ஆண்டுகளாக Native Medicals Charitable Trust (NMCT) அறங்காவலராக பல பயனுள்ள பணிகளைச் செய்து வருகிறார். மெக்சிகோ நாட்டின் World Cultural Counsil உறுப்பினராக உள்ள சிறப்புக்குரியவர் இவர்.


சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் கூட்டங்கள் நடத்த 1974 ஆம் ஆண்டு மயிலையில் உள்ள பட்டக்காரர் நிலையத்தைக் கேட்டு வாங்கியது, கொங்கு வேளாளர் சமுதாயத்தை தமிழக அரசு பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பாடுபட்டது, கல்வி நிறுவனங்களில் பணியாற்றியவர்கள் மற்றும் அரசுப்பணிகளில் இருந்த பல கொங்குச் சமுதாய நண்பர்களை சங்கத்தில் உறுப்பினராகச் சேர்த்தது, மாதாந்திரக் கூட்டங்களை நடத்தி சங்கத்தின் செயல்பாடுகளை தீவிரப்படுத்தியது போன்ற சமுதாயப்பணிகளை ஆற்றி சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர் இவர். செய்தி மடலில் கொங்குச் சமுதாயம் குறித்தும், தாவரவியல் குறித்தும், நோய் தீர்க்கும் மூலிகைகள் குறித்தும் பயனுள்ள பல கட்டுரைகளை எழுதியுள்ளார். சமுதாயப்பற்று மிக்கவர்.

இவருடைய மனைவி திருமதி கமலம் இவருடைய சாதனைகளுக்கும், சேவைகளுக்கும் உந்துசக்தியாகவும், உதவியாகவும் இருந்து வருகிறார்.இவருடைய மகன் டாக்டர் எல்.காந்த், மருமகள் டாக்டர் (திருமதி) மிருதுளாகாந்த் ஆகியோர் கோவையிலும், மகள் டாக்டர் (திருமதி) பிரியா முரளிதரன், மருமகன் டாக்டர் முரளிதரன் ஆகியோர் இங்கிலாந்திலும் மருத்துவப் பணியாற்றி வருகின்றனர்.

மிகச்சிறப்பாக கல்விப்பணியாற்றியதோடு, கொங்குச் சமுதாய முன்னேற்றத்திலும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றியுள்ள களிமேடு டாக்டர் கே.கே.லட்சுமணன் அவர்களுக்கு 02–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற பொன்விழாவில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. கே.சி.கருப்பன்

நாமக்கல் மாவட்டம் கொண்டிசெட்டிபட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு.சின்னண்ண கவுண்டர் – திருமதி இராக்காயம்மாள் தம்பதியரின் மகனாக 1933 ஆம் ஆண்டு பிறந்தார். நாமக்கல் தெற்கு அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து, கோவை பி.எஸ்.ஜி கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பையும், சென்னை லயோலா கல்லூரியில் பி.ஏ. பட்டப்படிப்பையும் முடித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டமும், இமாசலப் பிரதேசப் பல்கலைக்கழகத்தில் எம். எட்., பட்டமும் பெற்றார்.

பட்டதாரி ஆசிரியராகப் பதினோறு ஆண்டுகளும், தலைமை ஆசிரியராக இருப்பத்தி மூன்று ஆண்டுகளும் அனைவரும் வியக்கும் வகையில் சிறப்பாகப் பணியாற்றி, 1991 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1993 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை நாமக்கல் ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்கத்தின் வட்டத் தலைவராகவும், மாவட்டத் தலைவராகவும் பொறுப்பேற்று சங்க உறுப்பினர்களின் குறைகள் தீர்ப்பதற்காகப் பாடுபட்டுவருகிறார்.

1972 ஆம் ஆண்டு பாண்டமங்கலம் உயர்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலுக்காக ஐந்து ஏக்கர் நிலம் இலவசமாக இவருடைய தீவிர முயற்சியால் பெறப்பட்டது. 1984 ஆம் ஆண்டு பொட்டிரெட்டிப்பட்டி மேல்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு நிலம், மின்மோட்டார் இணைப்புடன் கிணறு, கட்டடங்கள், ஆய்வுக்கூடம் முதலானவற்றிற்கு ஆவண செய்து பள்ளியின் தரத்தை பெரிதும் உயர்த்தினார்.

1978 முதல் தற்போது வரை மாவட்ட சாரண ஆணையாளராகப் பணிபுரிந்து வருகிறார். சாரணச் செம்மல் என்ற விருது பெற்றுள்ளார். 1968 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டுவரை நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

1976 – 1982 ஆண்டுகளில் இருமுறை சென்னைப் பல்கலைக்கழக செனட் உறுப்பினராகச் செயல்பட்டார். 1981 – 1988 வரை எட்டு ஆண்டுகள் நாமக்கல் கல்வி மாவட்டத் தலைமை ஆசிரியர் கழகச் செயலாளராகச் சிறப்பாக பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு மாநிலத் தலைமை ஆசிரியர் கழக மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்று இருந்தார். மூன்றுஆண்டுகள் தலைமை ஆசிரியர் குரல் என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1982 ஆம் ஆண்டு இவருடைய மிகச்சிறப்பான ஆசிரியப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு அரசு நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவித்தது. நாமக்கல் நகராட்சி எல்லையில் மோகனூர் சாலையில் ஆசிரியர் குடியிருப்பை உருவாக்கியதிலும், கே.கே.குடியிருப்புக் காலனி உருவாக்கியதிலும் பெரும்பங்கு வகித்தார். 1968 முதல் 1980 வரை நாமக்கல் ஆசிரியர் வீடுகட்டும் சங்கத்தின் தலைவராக இருந்தார்.

நாமக்கல் மாவட்ட திறந்தவெளி விளையாட்டரங்கு கட்டப்பட்டதில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. இன்று இவருடைய தலைமையில் இயங்கும் நாமக்கல் வட்ட ஓய்வூதியர் சங்கம் தமிழகத்திலேயே தலைசிறந்த முன்மாதிரியான வட்டச்சங்கமாக செயல்பட்டு 4000 உறுப்பினர்களைக்கொண்டு ஓய்வூதியர்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்து வருகிறது.


சேலம் மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி, கார்கில் போர்வீரர் குடும்பத்தினர்க்கு நிதி உதவி, குஜராத் நிலநடுக்கத்தால் அல்லல்பட்ட மக்களுக்கு பொருள் உதவி, சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி உதவி, ‘தானே’ புயல் நிவாரண நிதி ஆகியவற்றிற்கு நிதி திரட்டியதில் இவர் பெரும்பங்கு கொண்டவர்.

எளிமை, பிறர்க்குதவி செய்யும் மனித நேயம், அயரா உழைப்பு போன்ற குணங்கள் கொண்ட இவருடைய மனைவி திருமதி பாக்கியலட்சுமி. மகன் பி.கே.அருள்பார்த்திபன் கோவையில் சொந்தமாக தொழில் செய்து வருகிறார். மருமகள் திருமதி கிருத்திகா பொறியியல் கல்லூரியில் உதவிப் பேராசிரியர். மகள் மலர்மல்லி; மருமகன் மின்வாரியத்தில் பொறியாளர்.

மிகச்சிறப்பாகக் கல்விப்பணியாற்றி தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றதோடு ஓய்வு பெற்றபின்னர் ஓய்வூதியதாரர்களின் நலனுக்காகச் சிறப்பான சேவை செய்து வரும் திரு. கே.சி.கருப்பன் அவர்களுக்கு 02–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற பொன்விழாவில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப்பாராட்டியது.

❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் க.அர்த்தநாரி எம்.எஸ்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கருமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கந்தசாமி – திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு 1947 ஆம்ஆண்டு மகனாகப் பிறந்தார். பள்ளிப்படிப்பை திருச்செங்கோடு அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியிலும், பி.யு.சி. படிப்பை பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரியிலும், எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பை 1971 ஆம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியிலும் முடித்தார். பின்னர் 1980 ஆம் ஆண்டு ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியில் எம்.எஸ். (பொது) பட்டம் பெற்றார்.

1973 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு அரசுப்பணியில் மருத்துவராக சிறப்பாகப் பணியாற்றினார். 1988 ஆம் ஆண்டு அரசுப்பணியை விட்டு விலகி சேலத்தில் ஸ்ரீகோகுலம் மருத்துவமனையை நிறுவினார். 2003 ஆம் ஆண்டு சேலத்தில் ஸ்ரீ கோகுலம் ஹெல்த் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட் என்ற மருத்துவமனையை நிறுவியுள்ளார். இந்த இரண்டு மருத்துவமனைகளின் நிர்வாக இயக்குநராக தற்போது சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இந்த இரண்டு மருத்துவ மனைகளும் மருத்துவ வசதிகளைக் குறைந்த கட்டணத்தில் சேலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் நிறுவப்பட்டு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. இந்த மருத்துவ மனைகளில் பொது மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவத்தில் பட்டமேற்படிப்பு துவக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ கோகுலம் செவிலியர் கல்லூரி நிறுவப்பட்டதோடு மருத்துவம் சார்ந்த இளங்கலை பாடங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

மனித உயிர் காக்க உதவும் நவீன வசதிகள் கொண்ட ஆம்புலன்ஸ் சேவையை அண்டை மாவட்டங்களில் ஏற்படுத்தியுள்ளார். பல இலவச மருத்துவ முகாம்களை நடத்தியுள்ளார். குறிப்பாக, மலைவாழ் மக்களுக்காகவும், பிறவி குறைபாடு உள்ள, பிளந்த

உதடு மற்றும் பிளந்த அன்னம் உள்ள குழந்தைகளுக்காக இலவச அறுவை சிகிச்சை முகாம்களையும் நடத்தினார்.

2001, 2003 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மருத்துவத்துறையில் சிறந்த சேவைக்காக சேலம் மாநகராட்சி விருதுகளைப் பெற்றுள்ளார். 2008, 2009 ஆம் ஆண்டு சேலம் ரோட்டரி சங்கம் இவருக்கு தொழில் வல்லுநர் விருது வழங்கியுள்ளது. 2001 ஆம் ஆண்டு சேலம் கட்டடப் பொறியாளர் சங்கமும், 2000,2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் கண்காணிப்பு அமைப்பும் சிறந்த மருத்துவ சேவைக்கான விருதை இவருக்கு வழங்கின.


2000–2001 ஆம் ஆண்டு சேலம் ஏர்போர்ட் லயன்ஸ் கிளப் சிறந்த இலவச மருத்துவ முகாம்களை நடத்தியதற்கான விருதினை வழங்கியுள்ளது. கிருஷ்ணகிரி, ஆத்தூர் மற்றும் சேலம் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் மருத்துவத் துறையில் சிறந்த சேவைக்கான விருதினை வழங்கியுள்ளது. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சிறந்த மருத்துவருக்கான விருதினை வழங்கியுள்ளது.

இவருடைய மனைவி டாக்டர் செல்லம்மாள் M.D., DGO பட்டங்கள் பெற்றவர். ஸ்ரீகோகுலம் மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக உள்ளார். இவர் கணவரின் வெற்றிகளுக்கு முக்கியக் காரணமாக விளங்குகிறார். இத்தம்பதியருக்கு அ.அகிலா, அ.யாமினி என்ற இரு மகள்களும், அ.கோகிலன் என்ற மகனும் உள்ளனர். மகள் டாக்டர் அகிலா MS (OG) வின் கணவர் டாக்டர் ந.ராஜேஷ் M.D., DM (GE). இருவரும் ஸ்ரீகோகுலம் மருத்துவமனையில் பணியாற்றி வருகின்றனர். மகள் டாக்டர் யாமினி B.E., Ph.D., வின் கணவர் டாக்டர் க.விஜயகுமார் B.E., Ph.D. இருவரும் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் (UK) பணிபுரிந்து வருகின்றனர். மகன் டாக்டர் அ.கோகிலன் MBBS., DWB (RD) மருத்துவப் பட்டமேற்படிப்பு படித்து வருகிறார்.

சேலம் நகரில் அனைத்து வசதிகளோடு இரண்டு சிறப்புமிக்க மருத்துவமனைகளை நிறுவி, குறைந்த செலவில் தரமான மருத்துவச் சேவையை மக்களுக்கு வழங்கி வருவதோடு, மனிதநேயம் மிக்க சிறந்த மருத்துவராக விளங்கும் டாக்டர் க.அர்த்தநாரி அவர்களுக்கு 02–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற பொன்விழாவில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. என்.சின்னசாமி

கோவை மாவட்டம் அன்னூர் அருகில் உள்ள தேவம்பாளையம் என்ற ஊரைச் சேர்ந்த நஞ்சப்ப கவுண்டர் – திருமதி மாராத்தாள் தம்பதியருக்கு என். சின்னசாமி, என்.நடராஜன், என்.கந்தசாமி, என்.ரத்தினம் ஆகிய நான்கு மகன்கள் பிறந்தனர். இவர்களில் மூத்தவர் என்.சின்னசாமி அவர்கள். இவர் 1945 ஆண்டு பிறந்தவர்.

கோவையில் ஆர்.எஸ்.புரம், டி.பி.ரோடு, அரசு கலைக்கல்லூரி சாலை, பீளமேடு அவிநாசி சாலை, நேரு ஸ்டேடியம் முதலான இடங்களில் மக்களின் பேராதரவுடன் சிறப்பாக இயங்கிவரும் நிறுவனம் கோவை பழமுதிர் நிலையமாகும்.

கோவை பழமுதிர் நிலையத்தின் நிறுவனர் திரு.என்.சின்னசாமி அவர்கள் தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு நல்ல தரமான உயர்தர காய்கறிகளைச் சிறந்த முறையில் சரியான விலையில் விற்பனை செய்கிறார். அவர் ஆரம்பத்தில் ஒரு மில் தொழிலாளியாக வேலை செய்துவந்தார். அவருடைய பணி மாலை 3 மணியளவில் முடிவடையும். அதன் பிறகு தன்னுடைய வருமானத்தை மேம்படுத்திக்கொள்வதற்காக வீடுவீடாகச் சென்று பழங்களை விற்றுவந்தார். அவ்வாறு விற்றதில் நல்ல தரமான பழங்கள் பற்றிய அறிவு அவருக்கு ஏற்பட்டது. பிறகு 1985 ஆம் ஆண்டில் அவர் தன்னுடைய பகுதி நேர வேலையை முழுமூச்சுடன் பெரிய அளவில் செய்ய முடிவு செய்தார். அவர் தன் மூன்று சகோதரர்களுடன் சேர்ந்து ஒரு சிறிய பழக்கடையை கோவை பீளமேடு பகுதியில் ஆரம்பித்தார். சிறிது சிறிதாக தன் தொழிலில் முன்னேற்றம் அடைந்து அவர் மேலும் மூன்று பழமுதிர் நிலையங்களை கோவையில் ஆரம்பித்தார். மேலும், ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களிலும், தென் இந்தியாவின் பல பகுதிகளிலும் கிளைகள் தொடங்கப்பட்டன. ஒவ்வொரு நிறுவனத்திலும் ஒரு நாளைக்கு 2500 வாடிக்கையாளர்கள் வருகிறார்கள். 2008 ஆம் ஆண்டு அவர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12 கோடியை எட்டியது.

தரம் மற்றும் வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவை ஒன்றே அவரின் ஒரே தாரக மந்திரமாக இருந்தது. சில்லறை வியாபாரம் மட்டுமின்றி பெரிய நிறுவனங்களுக்கும், உணவகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும், கோவையைச் சுற்றியுள்ள பல பகுதிகளுக்கும் விற்பனை செய்கிறார்.

2003 ஆம் ஆண்டு பழமுதிர் நிலையம் தன்னுடைய ஏற்றுமதி இறக்குமதி பிரிவை நிறுவியது. அதன்மூலம் அரபு தேசம் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தரமான பழங்கள் குறைந்த விலைக்கு வாடிக்கையாளர்களுக்கு விற்கப்படுகின்றன.

திரு.சின்னசாமி அவர்களின் சேவையைப் பாராட்டி புதுடெல்லியில் உள்ள ஆல் இண்டியா அச்சீவர்ஸ் கான்பிரன்ஸ் 2003 ஆம் ஆண்டிற்கான 'ஜெம் ஆப் இந்தியா' விருது வழங்கிச் சிறப்பித்தது. வொக்கேசனல் எக்ஸ்சலன்ஸ் விருது உடுமலைப்பேட்டை ரோட்டரி கிளப் சார்பில் அவருக்கு வழங்கப்பட்டது. சி.ஐ.ஐ.தமிழ்நாடு நிறுவனம் திரு.சின்னசாமி அவர்களுக்கு தமிழ்நாட்டின் சிறந்த 101 தொழில் அதிபர்களில் ஒருவராக அங்கீகாரம் கொடுத்துள்ளது.

"காலில் போடும் செருப்பை அழகாக அடுக்கிக் கண்ணாடி Show ரூமில் வைத்து விற்பனை செய்கிறார்கள். ஆனால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உண்ணும் பழங்களை தெருவோரம் புழுதியில் சாக்கடை ஓரத்தில் வைத்து விற்பனை செய்கிறார்கள். அதைப்பார்க்கும் போது மனசு பதறுகிறது" என்கிறார் திரு.சின்னசாமி. கடின உழைப்புடன் கூடிய முயற்சி திருவினையாக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமாய்த் திகழ்கிறார் திரு. சின்னசாமி.

இவருடைய மனைவி திருமதி சரஸ்வதி இவருடைய வெற்றிகளுக்குத் துணை நிற்கிறார். இத்தம்பதியருக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். மூத்த மகள் திருமதி கவிதா. இவருடைய கணவர் திரு. வஞ்சிமுத்து அவர்கள் கோவையில் பூம்ராங் ஐஸ்கிரீம் தொழில் செய்து வருகிறார். இரண்டாவது மகள் திருமதி சாரதா. இவரது கணவர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ஈரோடு மகாராஜா குழும நிறுவனங்களின் இயக்குநர். மகன் துரைராஜ் MIB பட்டம்பெற்றவர்; தந்தைக்குத் துணையாக அவருடைய தொழிலை கவனித்து வருகிறார். அவரது மனைவி திருமதி மிதுளா பிரியதர்ஷினி.

தன்னம்பிக்கை, அயரா உழைப்பு, நேர்மை, குறைவில்லாத அன்பான உபசரிப்பு, அனுசரிப்பு, கவனிப்பு ஆகியவற்றைத் தாரகமந்திரமாகக் கொண்டு முதல் தலைமுறை தொழிலதிபராக விளங்கும் திரு. என்.சின்னசாமி அவர்களுக்கு 02–09–2012 அன்று சென்னையில் நடைபெற்ற பொன்விழாவில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டியது.

❖❖❖❖

## இதயநோய் - 7 அபாயக் காரணிகள்

**1. புகைப்பிடித்தல்** : புகைப்பழக்கம் இல்லாதவர்களைவிட புகைப்பழக்கம் உள்ளவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் இருமடங்கு அதிகம் ஆகும். ஆகையால் நீங்கள் புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தால், அதை உடனடியாக நிறுத்திவிடவும். இதில் மற்றுமொரு விஷயம், புகைப் பிடிக்காதவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. இது முற்றிலும் நியாயமானது அல்ல.

**2. கொலஸ்ட்ரால்** : உங்களின் கொலஸ்ட்ரால் அளவுகளை சோதித்துக் கொள்ளுங்கள். கொலஸ்ரால் மற்றும் சாச்சுரேடட் மற்றும் டிரான்ஸ் கொழுப்பு குறைந்த அளவில் உள்ள உணவு, கொலஸ்ட்ரால் அளவுகளைக் குறைத்து இதய நோய் ஏற்படும் அபாயத்தைத் தடுக்க உதவுகிறது. தொடர்ச்சியான உடற்பயிற்சி தீமை பயக்கும் கொலஸ்ட்ராலைக் குறைக்கவும் நன்மை ஏற்படுத்தும் கொலஸ்ட்ராலை அதிகரிக்கவும் உதவுகிறது.

**3. இரத்த அழுத்தம்** : கொலஸ்ட்ராலைப் போலவே இரத்த அழுத்தத்திற்கான மேல்விளக்கம் மற்றும் சிகிச்சையும் உங்களுடைய ஒட்டுமொத்த அபாயக்குறிப்புகளுக்கும் ஏற்ப தனிநபர் அடிப்படையில் சிகிச்சையளிக்கப்பட வேண்டும். உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, உடல் பருமன் மேலாண்மை, தேவைப்பட்டால் மருந்துகள் ஆகியவற்றின் மூலம் இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைத்திருங்கள்.

**4. நீரிழிவு நோய்** : முறையாகக் கட்டுப்படுத்தப்படாவிட்டால் நீரிழிவு நோய் குறிப்பிடத்தகுந்த அளவில் இதய பாதிப்பை (மாரடைப்பு, மரணம் உள்பட) ஏற்படுத்தக் கூடும், ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, சரியான உடல் பருமனைக் கொண்டிருத்தல் மற்றும் மருத்துவர் பரிந்துரைப்படி மருந்துகளை உட்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுக்குள் வைத்திருங்கள்.

**5. உடற்பயிற்சி** : நம்மில் பலர் உடல் உழைப்பு அதிகமில்லாமல், உடற்பயிற்சி தொடர்ந்து செய்யாமல் அல்லது உடற்பயிற்சி பக்கமே செல்லாமல் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம். நடத்தல், தோட்டவேலை போன்ற மிக எளிய ஓய்வு நேர செயல்பாடுகளால் உங்கள் இதய நோய் அபாயத்தைக் குறைக்க முடியும்.

**6. உணவுப் பழக்கம்** : உப்பு, சாச்சுரேடட் கொழுப்பு, டிரான்ஸ் கொழுப்பு, கொலட்ஸ்ரால் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரைகள் ஆகியவை குறைந்த அளவில் உள்ள, இதயத்திற்கு இதமான உணவுகளைச் சாப்பிடுங்கள். இதய நோய் அபாயத்தைக் குறைக்கும் வைட்டமின்கள் மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள் குறிப்பாக ஆன்டி ஆக்ஸிடண்ட்கள் நிறைந்துள்ள உணவுகளை, அதிகமாக சாப்பாட்டில் சேர்க்க முயற்சி செய்யுங்கள். மேலும், தாவரம் சார்ந்த உணவுகள், அதாவது காய்கறிகள், பழங்கள், கடலை வகைகள் மற்றும் முழு தானியாங்களையும் சாப்பிடுங்கள்.

**7. மன அழுத்தம்** : சரிவர கட்டுப்படுத்தப்படாத மன அழுத்தம் மற்றும் கோபத்தால் மாரடைப்புகள் மற்றும் பக்கவாதங்களை ஏற்படுத்த முடியும். உங்கள் ஆபத்தைக் குறைக்க மன அழுத்தம் மற்றும் கோபத்தைக் கையாளும் உத்திகளைப் பயன்படுத்துங்கள். உங்கள் நேரத்தை சிறப்பாக நிர்வகிக்கவும் எதார்த்தத்திற்கு ஒத்துப்போகக் கூடிய வகையில் வாழவும் கற்றுக்கொள்ளுங்கள், மேலும், யோகா மற்றும் தியானம் போன்ற செயல்களிலும் ஈடுபடுங்கள்.

❖❖❖❖❖

## மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : வே. ஜெய் அசோகன் (மறுமணம்) |
| பிறந்த தேதி | : 27–12–1978 புதன் |
| பிறந்த நேரம், இடம் | : மாலை 06.50, நாமக்கல் |
| நட்சத்திரம் | :அனுசம் ராசி : விருச்சிகம், லக்கனம் : மிதுனம் |
| தந்தை பெயர் | : பி.வேலுச்சாமி |
| தாயார் பெயர் | : வி.ரேவதி |
| உடன் பிறப்பு | : 1 சகோதரி, 1 சகோதரன் |
| கல்வி | : M.Pharm |
| தொழில் | : Working at USA Pharmacaticals Company (R & D) |
| வருமானம் | : 1.5 இலட்சம் US Dollar per Annum |
| குலம் / கோவில் | : கண்ணந்த குலம், மோகனூர் நவலடியான் கோயில் |
| எதிர்பார்ப்பு | : 5’5 அடிக்கு மேல் உயரம்; அமெரிக்காவில் வேலை பார்ப்பவராக இருந்தால் நன்று |

| | | | |
|---|---|---|---|
| | ல | | சுக் கே |
| | நவாம்சம் | | சூரி |
| புத | | | |
| ராகு | குரு | சந் சனி | செவ் |

| | | | |
|---|---|---|---|
| | | | ல |
| கேது | இராசி | | குரு (வ) |
| | | | சனி ராகு |
| சூரி செவ் | சந் புத | சுக் | |

தொடர்புக்கு : 9994398900
போன் : 04286–232137

❖❖❖❖❖

# மணமகள் தேவை

| | |
|---|---|
| ஜாதகர் பெயர் | : பி.கோகுலகிருஷ்ணன் |
| பிறந்த தேதி | : 22–09–1981 செவ்வாய் |
| பிறந்த நேரம், இடம் | : 14.19 IST, ஈரோடு |
| நட்சத்திரம் | : புணர் பூசம் (பாதம் 2), ராசி : மிதுனம், லக்கனம் : மகரம் |
| தந்தை பெயர் | : கே.என்.பாலசுப்பிரமணியன் |
| தாயார் பெயர் | : திலகவதி |
| தந்தை தொழில் | : Textile Export Business |
| உடன் பிறப்பு | : 1 அக்கா டாக்டர், ஆஸ்திரேலியா, திருமணமானவர்; மாப்பிள்ளை – டாக்டர் |
| கல்வி | : M.Sc., International Business, London, (UK), MA., (Marketing) (UK) |
| தொழில் | : Own Textile Export Business, Karur |
| உயரம் / நிறம் | : 5.6 அடி, நல்லசிவப்பு |
| குலம் / கோவில் | : புலியூர் பெருங்குடி குலம், புலியூர் ஸ்ரீ முச்சிலியம்மன், ஸ்ரீ காளியம்மன் |
| எதிர்பார்ப்பு | : நல்ல பாரம்பரியமான குடும்பப் பின்னணி, நன்கு படித்த குணவதியான குடும்பப் பாங்கான பெண். |

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | இராசி | | செ ரா |
| லக் கே | | | |
| | | புத சுக் | சூரி குரு, சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | சந் | சனி |
| சூரி கே | நவாம்சம் | | குரு |
| லக் | | | ரா |
| செ | | புத | |

தொடர்புக்கு :

தந்தை : கே.என்.பாலசுப்பிரமணியன் செல் : 98430 79736

தாய் : திலகவதி செல் : 9047034549

❖❖❖❖❖